NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2013

# TAMIL FIRST ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours 80 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 7 pages. Please check that your paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers must be in TAMIL.

---

## SECTION 1 பகுதி ஒன்று

**கீழ்வரும் பகுதியை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.**

# நல்ல முடிவு

தந்தையின் கட்டளையை ஏற்று இராமர் வனவாசம் சென்றார். அவர் மனைவி சீதையும், தம்பி இலட்சுமணனும் உடன் சென்றனர்.

காட்டில் இராமருக்குக் குகன் என்பவருடைய நட்பு கிடைத்தது. குகன் வேடர்களின் **தலைவர்**. அவர் தம் இனத்தாருடன் இராமருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார். இராமரும் குகனைத் தம்முடைய சகோதரர்களில் ஒருவராகவே ஏற்றுக் கொண்டார்.

ஒருநாள் இராமர் ஓரிடத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். குகன் தம் கூட்டத்தாருடன் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தார். அவர்கள் தொலைவில் படை பரிவாரங்கள் வருவதைக் கண்டனர்.

அப்போது குகன், "ஐயனே! படையினர் நம்மை நோக்கித்தான் வருகின்றனர். பார்த்தால் அயோத்தியினர் போல் தெரிகின்றனர். தங்கள் தம்பி பரதன்தான் படை எடுத்து வருகிறார் என நினைக்கிறேன். நாமும் போருக்குத் தயாராவோம்" என்றார்.

அதற்கு இராமர், "**குகனே அவசரப்படாதே.** வருபவர் யார், அவர் என்ன **நோக்கத்துடன்** வருகிறார் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு பிறகு செயல்படுவோம்" என்றார்.

"இதில் தெரிந்து கொள்வதற்கு என்ன இருக்கிறது? தாங்கள் பெருமனதுடன் நாட்டைத் தம்பியிடம் ஒப்படைத்து விட்டு வந்தீர்கள். அவரோ தங்களையே அழிக்க எண்ணிப் படையுடன் வருகிறார். இனிப் பொறுத்துப் பயனில்லை. கட்டளையிடுங்கள்; என்னுடைய வேடர் படை எதிரிப்படையை வென்று திரும்பும்" என்றார் குகன்.

"**குகனே!** எதிலும் எப்போதும் உனக்கு அவசரம்தான்! நான் சொல்வதைக் கேள். ஒருவரைப் பற்றி ஆராயாது அவர்மேல் தப்பபிப்பிராயம் கொள்வது தவறு. ஆராயாது அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடாது. அதனால் பல துன்பங்கள் விளையலாம். எனவே சற்றுப் பொறுமையாகவே இரு" என்றார் இராமர். அதற்குக் குகன், "அரசே! அதோ பாருங்கள். படைக்குத் தலைமையேற்று வருபவர் தங்கள் தம்பி பரதனேதான். காட்டில் தாங்கள் தனியாக இருக்கிறீர்கள். இப்போது தங்கள் தம்பி லட்சுமணனையும் சேர்த்துத் தங்களைக் கொன்று விடுவது சுலபம். பின் அரசுரிமைக்கும் போட்டியிராது என்று நினைத்து படை எடுத்துள்ளார். இப்போதே நான் என் கூட்டத்தாருடன் சென்று அவர்களைக் கொன்று விட்டு வருகிறேன்" என்று குகன் ஆவேசத்துடன் கூறினார்.

IEB Copyright © 2013

**1.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை நிரப்புக:**

1.1.1 குகன் வேடர்களின் ______________ . (1)

1.1.2 ஒரு நாள் இராமர் ஓரிடத்தில் ________________ எடுத்துக் கொண்டிருந்தார். (1)

1.1.3 நாமும் ________________ தயாராவோம், என்றார். (1)

1.1.4 ________________ சொல்வதைக் கேள். (1)

1.1.5 இப்போது தங்கள் ____________ லட்சுமணனையும் சேர்த்து விடுவது சுலபம். (1)

**1.2 கீழ்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.**
**Answer the following questions.**

1.2.1 இராமருக்குக் குகனின் நட்பு எங்கே கிடைத்தது? (2)

1.2.2 தொலைவில் குகன் அவர்கள் எதை கண்டார்? (2)

1.2.3 படையைப் பார்த்தப் பிறகு, குகன் என்ன நினைத்தான்? (2)

1.2.4 யாவை அழிக்க படை வந்தது? (2)

1.2.5 ஏன் இராமரை கொன்று விட மிக சுலபம் என்கிறார் குகன்? (2)

**1.3 எது உண்மை, எது உண்மை அல்ல என்று எழுது.**

1.3.1 இராமர், குகனை சொந்த சகோதரனாக ஏற்றுக்கொண்டார். (1)

1.3.2 படை வருவதைக்கண்டு இராமர் பயந்து விட்டார். (1)

1.3.3 இராமர் நாட்டை தன் தம்பியுடன் ஒப்படைத்து வந்தார். (1)

1.3.4 குகன் அவசரக்காரன் என்று இராமர் சொல்கிறார். (1)

1.3.5 படைக்குத் தலைமை ஏற்று வருபவர் இராவணன். (1)

1.4 சரியாக எழுதுக. (உம். : ஒநாள்ரு = ஒருநாள்)

1.4.1 விடைபணி (1)

1.4.2 ருஇக்கிறது (1)

1.4.3 ராஆயாது (1)

1.4.4 லபசும் (1)

1.5 ஒருமைக்குப் பன்மை எழுதுக.

1.5.1 தலைவர் (1)

1.5.2 படை (1)

1.5.3 சிங்கம் (1)

1.5.4 புறா (1)

1.6 அதே பொருள் தரும் இன்னொரு சொல் எழுதுக.

1.6.1 சகோதரன் (1)

1.6.2 தந்தை (1)

[30]

IEB Copyright © 2013

## SECTION 2 பகுதி இரண்டு

**கீழ்வரும் பகுதியை சுருக்கி எழுதுக (சுமார் 15-20 சொற்கள்)**

### படித்துப் பழகுவோம்

அன்று ஞாயிற்றுக்கிழமை. அப்பா சந்தைக்குச் சென்று வந்தார். எனக்கும் என் தங்கைக்கும் ஆளுக்கொரு மிட்டாயைக் கொடுத்துவிட்டுச் செய்தித்தாளைப் படிக்கக் கூடத்தில் அமர்ந்தார். அப்போது என் தங்கை மிட்டாயை வாயில் போட்டுக்கொண்டு, மிட்டாய்த் தாளைச் சன்னல் வழியே வீசச் சென்றாள். அதைக் கண்ட என் தந்தை அவளை அருகே அழைத்தார்.

"நீ அப்படிச் செய்யலாமா? இதோ பார், இந்தத் தாள் எவ்வளவு மெல்லியதாக உள்ளது. இதை இங்கிருந்து வீசினால் அது காற்றில் பறந்து, கீழ்மாடியில் உள்ள யாராவது ஒருவரின் வீட்டுச் சன்னல் வழிச் சென்று வீட்டினுள் விழுந்துவிடலாம். அதனால், அவர்களுடைய வீடு அசுத்தம் அடையும் அல்லவா?" என்று கேட்டார்.

**[10]**

## SECTION 3 பகுதி மூன்று

**3.1 கீழ்வரும் பகுதியைப் படித்து, பின் வரும் கேள்விகளுக்கு விடை தருக.**

அழகன், இருபத்தைந்து வயது இளைஞர். அவர் சிறுவயதிலேயே தையற்கலையை விரும்பிக் கற்றுக்கொண்டார். தேசிய சேவையை முடித்ததும் தம் திறமையை மேலும் வளர்த்துக்கொள்ள விரும்பி ஒரு தையற்கடையில் வேலைக்குச் சேர்ந்தார்.

சொந்தமாகவே ஒரு தையற்கடையைத் திறக்க வேண்டும் என்பது அவரின் நீண்ட நாள் ஆசை. ஒரு கடையைத் தொடங்குவதற்குப் பொருத்தமான ஓர் இடம் அவசியம். கடையை நடத்துவதற்கு ஒரு தையல் இயந்திரமும் ஆடைகள் தைக்கப் பலவகையான துணிகளும் தைத்த ஆடைகளைக் காட்சிக்கு வைக்கக் கண்ணாடிப் பேழைகளும் வேண்டும். இவற்றை எல்லாம் வாங்குவதற்குப் போதிய பணமும் தேவை என்பதை உணர்ந்தார். அழகன்.

3.1.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (1)

3.1.2 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு பெயர்ச் சொற்கள் எழுதுக. (4)

3.1.3 வினைச் சொல் என்றால் என்ன? (1)

3.1.4 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு வினைச் சொற்கள் எழுதுக. (2)

**3.2 பிரித்து எழுதுக:**

3.2.1 இதைப்பிடி (2)
3.2.2 இரண்டாயிரம் (2)
3.2.3 மூவாயிரம் (2)
3.2.4 பாடத்தைப்படி (2)

IEB Copyright © 2013

**3.3 சேர்த்து எழுதுக:**

3.3.1 பூ + தோட்டம் (1)
3.3.2 அவனை + கண்டாள் (1)
3.3.3 பெயரை + சொல் (1)
3.3.4 கவனமாக + கேள் (1)

**3.4 ஆண்பாலுக்கு பெண்பால் எழுதுக:**

3.4.1 பிச்சைக்காரன் (1)
3.4.2 திருடன் (1)
3.4.3 சிறுவன் (1)
3.4.4 அரசன் (1)

**3.5 கீழ்வரும் ஐந்து சொற்களில் எச்சொல் பொருத்தமானதல்ல?**

3.5.1 பூனை, எலி, வாத்து, மாடு. (2)
3.5.2 ஒன்று, மூன்று, விரல், ஐந்து. (2)
3.5.3 படி, அடி, ஓடு, மடி. (2)
3.5.4 மஞ்சள், செடி, சிவப்பு, பச்சை. (2)

**3.6 எதிர்ச்சொற்கள் எழுதுக. (உம். அங்கே : இங்கே)**

3.6.1 நலலது (2)
3.6.2 பகல் (2)
3.6.3 வலப்பக்கம் (2)

**3.7 காலங்கள் முடிவு செய்க.**

| <u>இறந்த காலம்</u> | <u>நிகழ் காலம்</u> | <u>எதிர் காலம்</u> | |
|---|---|---|---|
| 3.7.1 போனேன் | போகிறேன் | ________ | (1) |
| 3.7.2 சிரித்தாள் | சிரிக்கிறாள் | ________ | (1) |

**[40]**

Total : 80 marks

IEB Copyright © 2013